**செய்தி வெளியீடு எண்:029** **நாள் :12.01.2016**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி இன்று (12.01.2016) மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.கே.ஏ.ஜெயபால் அவர்கள் மீன்வளத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த பணி முன்னேற்றத்தினை ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மீன்வளத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், குறிப்பாக கடல் மீனவர்களின் நலனுக்கென செயல்படுத்தப்படும் முக்கியத் திட்டங்களான மீன்பிடி தடைகால நிவாரணம், மீன்பிடிப்பு குறைந்த காலத்திற்கான சிறப்பு நிவாரணம் கடல் மீனவர்களுக்கான தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணம் மற்றும் மீனவ மகளிருக்கென தமிழக அரசால் செயல்படுத்தப்படும் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டங்கள் முழுமையாக முடிக்கப்பட்டு, மேற்காணும் திட்டங்களின் கீழ் நடப்பாண்டில் 5.50 இலட்சம் மீனவ பயனாளிகளுக்கு ரூ.125.569 கோடி நிவாரணத்தொகையாக வழங்கப்பட்டுள்ளதைப் பாராட்டிய மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் திட்டங்களின் வெளிப்படை தன்மையை உறுதி செய்யும் விதமாக பயனாளிகளின் பட்டியலை மீன்துறையின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய அறிவுரை வழங்கினார்.

தமிழக மீனவர்கள் மாற்றுமுறை மீன்பிடிப்பில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் நோக்கோடு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு பணியாணை வழங்கி துவக்கி வைக்கப்பட்ட சிறப்பு திட்டமான ஆழ்கடல் சூரைமீன்பிடி படகுகளுக்கு 50% மானியமாக ரூ.30.00 இலட்சம் வரை வழங்கிடும் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் படகு கட்டுமான பணிகளை மாவட்ட வாரியாக மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார். மேலும், இத்திட்டத்தின் கீழ் மீனவர்கள் விரைவாக படகுகள் கட்டி வருவதை வெகுவாக பாராட்டிய அமைச்சர் அவர்கள், முதல்நிலைக்கான தகுதியான பயனாளிகளுக்கு மானியத்தொகையை உடனடியாக விடுவிக்க அறிவுறுத்தினார்.

மேலும், காணாமல் போன மற்றும் அண்டை நாட்டினரால் கைது செய்யப்பட்ட மீனவர்களுக்கான நிவாரண தொகை வழங்குதல், மீன்வர்களை தொடர்ந்து மீனவ மகளிருக்கான அடையாள அட்டை வழங்குதல், அவசரகால சமிக்கை அனுப்பும் கருவிகள் வழங்குதல் போன்ற திட்டங்களை ஆய்வு செய்ததுடன் இத்திட்டங்களின் கீழ் பயனாளிகளுக்கு உரிய நேரத்தில் பலன் சென்றடைவதன் அவசியத்தை வலியுறுத்தி திட்டங்களை விரைந்து முடிக்க அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, உள்நாட்டு மீன்வளத்தினை மேம்படுத்திடும் பொருட்டு மீன்வளத்துறை மூலம் செயல்படுத்தப்படும் தேசிய புரத மேலுணவு இயக்கத் திட்டங்கள், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய திட்டங்கள், நீர்வள நிலவளத்திட்டம், தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டங்கள், வண்ண மீன்வளர்ப்புத் திட்டங்கள், நீர்த்தேக்கங்களின் மீன்வள மேலாண்மை மற்றும் மீன்குஞ்சு உற்பத்தி ஆகியவற்றின் பணி முன்னேற்றம் குறித்து விரிவாக ஆய்வு செய்ததுடன் மீனவர்கள் தங்கள் படகுகள் பாதுகாப்பாக நிறுத்திடவும் தாங்கள் பிடித்து வரும் மீன்களை சுகாதாரமாக தரையில் இறக்கி உரிய விலையை பெற்றிடவும் வழிவகை செய்திடும் விதமாக, நடப்பாண்டில் மட்டும் ரூ. 1315.29 கோடி செலவில் உலகத்தரத்துடன் உருவாக்கப்படும் மீன் பிடித்துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதள பணிகளின் முன்னேற்றத்தினை ஆய்வு செய்து பணிகளை துரிதப்படுத்த அறிவுரை வழங்கினார்.

மீன்வளத்துறையின் மாநாட்டு கூடத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மீன்துறை ஆணையர் டாக்டர் பீலா ராஜேஷ், இ.ஆ.ப., தலைமை அலுவலக மீன்துறை கூடுதல் இயக்குநர்கள் மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பணிபுரியும் மண்டல மீன்துறை இணை/துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**